<u>பயிற்சிகள்.</u>

வணக்கம் மாணவர்களே,

பாடப் புத்தகத்தில் பக்கம் **145** இல் காணப்படும் விகாரப்புணர்ச்சியையும் அதோடு, தோன்றல் விகாரப்புணர்ச்சியையும் அறிதல். தொடர்ந்து, இடுபணி **1,** இடுபணி **2** ஒட்டி கலந்துரையாடுதல். பின்னர், இடுபணி **3,** இடுபணி **4,** வளப்படுத்துதல் பயிற்சி, குறைநீக்கல் பயிற்சியைச் செய்யவும். உங்கள் விடைகளை எழுதி தொலைவரியில் அனுப்புதல். அதோடு, இத்தலைப்பையொட்டி கலந்துரையாட கூகுள் கூடலில் (Google Meet) திங்கள் இரவு **7** மணியளவில் சந்திப்போம். அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

நன்றி, மாணவர்களே.

## பாடம் 4 இலக்கணம்

தொகுதி 14

### தோன்றல் விகாரம் அறிக.

**தோன்றல் விகாரம்**

தனிக்குறிலை அடுத்து மெய் வந்து, வருமொழி உயிரெழுத்தில் தொடங்கினால் நிலைமொழியின் இறுதியில் உள்ள மெய் இரட்டிக்கும்.

எ.கா: மெய் + அடி = மெய்ப்படி
கண் + இமை = கண்ணிமை

**கவனத்தில் கொள்க**

இரு சொற்கள் புணரும்போது நிலைமொழியின் ஈற்றிலோ வருமொழியின் முதலிலோ மாற்றங்கள் ஏற்பட்டால் அது விகாரப்புணர்ச்சியாகும்.

**விகாரப்புணர்ச்சி 3 வகை**

விகாரப்புணர்ச்சி
- தோன்றல் விகாரம்
- கெடுதல் விகாரம்
- திரிதல் விகாரம்

"எனக்கு மண்ணாசையோ, பெண்ணாசையோ, பொன்னாசையோ கிடையாது. எனக்கு வேண்டியதெல்லாம் மக்கள் வாழ்வு. மக்களின் கண்ணிமைகளிலிருந்து சிறிதளவு கண்ணீர் வந்தாலும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. அதனால்தான், அநியாயத்தைத் தட்டிக் கேட்க வந்தேன்," என்று ஆவேசமாகப் பேசினான் அறிவரன். அவனை அமைதிப்படுத்தி அழைத்துச் செல்ல வந்த இரு இளைஞர்களும் அவன் பேச்சின் உண்மையை உணர்ந்து அப்படியே நின்றனர்.



**இடுபணி 1**

வாசிப்புப் பத்தியில், தோன்றல் விகார விதியிலான சொற்களைப் பட்டியலிடுக.

**இடுபணி 2**

மேலே பட்டியலிடப்பட்ட சொற்களைப் பிரித்தெழுதுக.

5.3.4 தோன்றல் விகாரப்புணர்ச்சியில் நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து மெய்யும் வருமொழியின் உயிரெழுத்தும் புணர்தல் பற்றி அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.

தொகுதி 14

## இடுபணி 3

**தோன்றல் விகாரவிதிக்கு ஏற்பச் சேர்த்து எழுதுக.**

1. கல் + ஆணி = ______
2. மெய் + அறிஞர் = ______
3. விண் + ஒளி = ______
4. பொன் + ஆசை = ______
5. பொன் + அட்டை = ______
6. மெய் + அடி = ______

## இடுபணி 4

**தோன்றல் விகாரவிதிக்கு ஏற்பப் பிரித்து எழுதுக.**

1. பண்ணோசை = ______
2. கண்ணொளி = ______
3. முன்னட்டை = ______
4. மின்னஞ்சல் = ______
5. பொன்னூஞ்சல் = ______
6. மின்னட்டை = ______

## வளப்படுத்துதல்

**தோன்றல் விகாரச்சொற்களை அடையாளம் கண்டு பிரித்தெழுதுக.**

1. தாயின் இனிமையான தாலாட்டு அஞ்சனாவின் கண்ணிமைகளை மூடச் செய்தது.
2. இறைவனின் மெய்யடி வணங்குபவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வர் என்று கூறினார் சிவனடியார்.
3. அறியாமையால் மூழ்கியிருந்த கதிரவன் அறிஞரின் உரையைக் கேட்டு மெய்யறிவு பெற்றான்.
4. சிறப்பாகக் கவி பாடிய கவிஞருக்கு மன்னரால் பொன்னாரம் பரிசளிக்கப்பட்டது.
5. மண்ணாசை கொண்ட இளவேந்தன் பார்க்கும் இடமெல்லாம் நிலங்களை வாங்கிக் குவித்தான்.

## குறைநீக்கல்

**தோன்றல் விகாரப்புணர்ச்சி விதிக்கேற்பச் சேர்த்தெழுதுக.**

1. பண் + இசை = ______
2. சொல் + அணி = ______
3. பொன் + ஆபரணம் = ______
4. மண் + ஆசை = ______
5. கண் + ஓட்டம் = ______
6. பொன் + ஆரம் = ______